# அருப்புக்கோட்டை நகராட்சி

**சார்வாரி ஆண்டு ஆனி மாதம் நாள் : 30.06.2020 செவ்வாய் கிழமை காலை 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திரு.கா.சேர்மக்கனி, M.Tech., தனி அலுவலர்**

பொருள் 1 : அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 1400, நாள் 29.07.2013ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனம் வழஙகிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது ஏற்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண் 2275 நாள் 28.08.2015ன்படி 01.10.2015 முதல் 30.09.2018 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தரவு வழஙகப்பட்டது. தற்பொழுது மேற்படி நிறுவனத்தாருக்கு வழஙகப்பட்ட பராமரிப்பு காலம் 30.09.2018 உடன் முடிவடைந்துவிட்டது.

மேலும் அரசாணை எண் 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (ந.நி–IV) நாள் 21.04.2017ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35871/2014/இ1 நாள்27.04.2017ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து விளக்குகளையும் Energy Saving Lamps (LED Lights) and Engergy saving measureing அமைக்க மின்சேமிப்பு கணக்கீட்டு முகவர்கள் (Investment Grade Audit Agency) நியமனம் செய்யப்பட்டு திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது. மேற்படி திட்டமானது விரைவில் நடைமுறை படுத்தப்பட உள்ளது. மேற்கண்டவாறு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேலும் 3 ஆண்டுகளுக்கு தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள வழிவகை இல்லாத சூழ்நிலையில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி இவ்வலுவலக தீர்மான எண் 525 நாள் 08.10.2018 ன்படி அதே விலைவிகிதத்திலேயே ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு 08.10.2018 முதல் 31.12.2018 வரை மூன்று மாதஙகளுக்கும், இவ்வலுவலக தீர்மான எண் 578 நாள் 11.12.2018 ன்படி 01.01.2019 முதல் 30.06.2019 வரை ஆறு மாதஙகளுக்கும் மேலும் இவ்வலுவலக தீர்மான எண் 729 நாள் 29.07.2019 ன்படி 01.07.2019 முதல் 31.12.2019 வரை ஆறு மாதஙகளுக்கும் மேலும் இந்நகர் மன்ற தீர்மான எண் 823 நாள் 06.12.2019ன்படி 01.01.2020 முதல் 30.06.2020 வரை பணிகளை மேற்கொள்ள காலநீடிப்பு செய்து வேலைஉத்தரவு வழஙகப்பட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தற்சமயம் மேற்கண்டவாறு காலநீட்டிப்பு செய்யப்பட்டு ஆறு மாதஙகள் ஜீன் மாதத்தோடு முடிவடைய உள்ளதால் தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதியும், நாடு முழுவதும் கொரோனா நோய் தாக்கம் உள்ளதை கருத்தில் கொண்டும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதே விலை விகிதத்திலேயே மேலும் ஆறு மாதஙகளுக்கு தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மேற்படி ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனம் சம்மதம் தெரிவித்து கடிதம் வழஙகியதன் அடிப்படையில் 01.07.2020 முதல் மேலும் ஆறு மாதஙகளுக்கு கால நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழஙகலாம். ந.க.எண்.6380/2013/இ2

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.955**

பொருள் 2 : அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 1 ராமானுஜகூடத்தெருவில் பயன்பாட்டில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறையில் கோப்பைகள், தளஙகள், கதவுகள், மோட்டர் அறை சேதமடைந்துள்ளதை சீரமைத்து பராமரிப்பு பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2743/2020/இ1

<u>தீர்மானம் :</u>

அனுமதிக்கப்பட்டது.

<u>தீர்மான எண்.956</u>

தனி அலுவலர்
அருப்புக்கோட்டை நகராட்சி